SS3

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 03

**EPU3532 – கலைத்திட்ட கற்கையும் செயன்முறையும் - கலைத்திட்ட கற்கைகளும் மொழிக்கற்கைகள் செயற்பாடும் (சிங்கள / தமிழ் / ஆங்கிலம்)**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.05.2025

நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. “மனிதர்கள் கண்டுபிடித்த மிகவும் சிறப்பு வாய்ந்த கருவி மொழி.” மொழியின் **ஐந்து (05)** தனித்துவமான அம்சங்களை எழுதுக.
2. மொழி இரட்டைத்தன்மையைக் கொண்டுள்ளது என்பதை உதாரணமொன்றின் மூலம் விளக்குக.
3. சிங்கள மொழி பல்வேறு மொழிகளின் சொற்களால் வளப்படுத்தப்பட்டுள்ளது.
   i. கடிகாரம், உருளைக்கிழங்கு மற்றும் அல்மிரா ஆகிய சொற்கள் எந்த மொழியிலிருந்து வந்தன?
   ii. ஆங்கில மொழியிலிருந்து வந்த **மூன்று (03)** சொற்களை எழுதுக.
4. **நான்கு (04)** மொழியியல் திறன்களைப் (Linguistic Skills) பற்றிக் குறிப்பிடுக.
5. “மொழி ஒரு சமூகமயமாக்கும் முகவர்.” இக்கருத்தை ஆதரிக்க **மூன்று (03)** ஆதாரங்களை முன்வைக்குக.
6. மொழியின் கற்றலைப் பாதிக்கும் **மூன்று (03)** குடும்பம் சார்ந்த காரணிகளைக் குறிப்பிடுக. இம் **மூன்று (03)** காரணிகளும் மொழிக்கற்றலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
7. செய்வினை, செயற்பாட்டு வினை (Passive vocabulary and active vocabulary) ஆகியவற்றை உதாரணங்களுடன் விளக்குக.
8. முன்பள்ளி அல்லது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் பிள்ளைகளின் பேச்சுத்திறனை விருத்தி செய்யப் பின்பற்றக்கூடிய **ஐந்து (05)** முறைகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** கவனத்துடன் செவிமடுத்தல், விளக்கத்துடன் செவிமடுத்தல் மற்றும் மகிழ்ச்சியுடன் செவிமடுத்தல் ஆகிய **மூன்று (03)** செவிமடுத்தல் பகுதிகளைப் பற்றிக் கலந்துரையாடுக.

   **(08 புள்ளிகள்)**

   **ii.** இம்மூன்று (03) பகுதிகளில் ஒவ்வொன்றையும் விருத்தி செய்வதற்கு ஆசிரியர் என்ற வகையில் முதன்மை நிலை - I இல் ஏற்பாடு செய்யும் **இரண்டு (02)** செயற்பாடுகளை எழுதுக.

   **(12 புள்ளிகள்)**



23

10. **i.** "பிள்ளையொன்று வளரும் போது அதன் குடும்பம் பிள்ளையின் மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கு சிறப்பான பங்களிப்பை வழங்குகின்றது." இக்கருத்தை உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

**ii.** பிள்ளைகளின் முன் வாசிப்புத் திறன்களை விருத்தி செய்வதற்கு முன்பள்ளி ஆசிரியராக நீங்கள் மேற்கொள்ளும் **ஐந்து** (05) செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **i.** பிள்ளையின் மொழி கற்றலில் வானொலி, தொலைக்காட்சி மற்றும் கணினிகளின் வகிபங்கை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**ii.** வெற்றிகரமான ஆசிரியர் பிள்ளைகளின் மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கு ஊடகங்களை எவ்வாறு விளைதிறனுடன் பயன்படுத்த வேண்டும் என்பதனை ஆராய்க.

**(12 புள்ளிகள்)**

12. **i.** "மொழித் திறன்களை விருத்தி செய்வதற்கு பிள்ளைகளில் செவிமடுக்கும் திறன்களை வளர்ப்பது அவசியம்." பிள்ளைகளின் செவிமடுக்கும் திறன் விருத்தி குறைபாட்டால் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** முன்பள்ளிகள் / ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் செவிமடுக்கும் திறனை விருத்தி செய்ய ஆசிரியரொருவர் ஏற்பாடு செய்யக்கூடிய **ஐந்து** (05) செயற்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **i.** முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பாடசாலைக் காலங்களில் பிள்ளைகள் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) மொழிசார்ந்த இடர்பாடுகளை எழுதுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** நீங்கள் கல்வி உளவியல் பற்றிய அறிவு உள்ள ஆசிரியராக, அம் மொழி சார்ந்த இடர்பாடுகளை வெற்றிகொள்ள மேற்கொள்ளக்கூடிய படிகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -